**புத்தளம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 ஆம் ஆண்டிற்கு பெற வேண்டிய ரூபா 48,168 ஆன மொழிக் கொடுப்பனவு மற்றும் இலக்கம் 25/2014 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 5,560,000 தொகை 2017 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் கணக்குகளில் பெற வேண்டியவைகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். | இந்த தவறு பேரேட்டுக் குறிப்புகள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நெளுக்குளம் விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்வதற்கு நகர திட்டமிடல் மற்றும் | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்குகளை திருத்துவதற்கு பேரேட்டு குறிப்புக்கள் மூலம் கடன்பட்டோர் கணக்கிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நீர்வழங்கல் அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 10,363,588 தொகை மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 8,863,588 இற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | | உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 1,500,000 தொகை ஏனைய கடன்கொடுத்தோர்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | முன்னைய ஆண்டில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்தின் பங்களிப்பு கணக்கு ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடான ரூபா 31,680,218 தொகை இனங்காணப்படாது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22,133 ஆன வேறுபபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | காலாவதியான ரூபா 12,813,361 ஆன நானாவித வைப்புக்கள் பெற வேண்டிய நடைமுறை சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தவறினை பேரேட்டுக் குறிப்புக்களின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 வருட காலத்தினை விஞ்சிய பெற வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 46,938,516 ஆகும். | அறவிடப்பட வேண்டிய வருமானங்கள், துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது பயன்படுத்தப்பட்ட கணனி மென்பொருளின் தவறொன்றினால் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறுள்ள துடன் இனங்காணப்பட்ட நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 3 வருடங்களை கடந்த செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 31,489,091 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 268,091,801 கூட்டுப்பெறுமதியுடைய 09 கணக்கு விடயங்களுக்கு உரிய கணக்காய்வு சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய கணக்காய்வு சான்றுகள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அதிகாரம்) | | | |
| **(i)** | 33 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்தினை சான்றுப்படுத்தும் ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை. | சபைக்குச்சொந்தமான ஆதனங்கள் தொடர்பில் உரித்தினை சான்றுப்படுத்தும் ஆவணங்களில் | உரித்தினை சான்றுப்படுத்தும் ஆவணங்களின் குறைபாடுகள் காணப்படுகின்றமையால் அவற்றை நிவர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறைபாடுகளை நிவர்த்தி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். | செய்து செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ii)** | 178(1) மற்றும் (2) ஆம் பிரிவு | செலவின விடய இலக்கத்துடனான ரூபா 375,000 ஆன குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செலவினங்களுக்காக செலவின மூலங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செலவின மூலங்களை பெற்றுக்கொண்டு குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**<br>--------------------------- | | | |
| **(i)** | நிதிப்பிரமாணம் 565(3),(4) மற்றும் (5) | கடந்த வருடங்களில் வைப்பு பேரேடுகளில் மீதிகள் முன்கொண்டு வரப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் பொது 71 மாதிரியில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு பொழிப்புக்கள் கூற்றுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ii)** | நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் இறுதியில் 3 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 14,685,157 தொகையான வைப்பு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பு மீதிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ந்த வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,213,251 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,221,862 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 23,933 | 24,143 | 12,660 | 90,493 | 24,733 | 24,185 | 7,949 | 95,561 |
| வாடகை | 28,000 | 28,000 | 27,568 | 18,007 | 55,017 | 39,048 | 36,254 | 30,896 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,000 | 1,000 | 848 | 152 | 910 | 1,032 | 1,032 | - |
| ஏனைய வருமானம் | 28,140 | 28,140 | 10,332 | 17,809 | 91,628 | 112,592 | 76,504 | 150,438 |
| மொத்தம் | 81,073 | 81,283 | 51,408 | 126,461 | 172,288 | 176,857 | 124,739 | 276,895 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வீதவரித் தொகையானது ரூபா 24,143,551 இலல் ஆண்டினுள் சேகரிக்கப்பட்டது ரூபா 5,982,182 | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவேடுகளின் குறைபாடுகள் மற்றும் பதவிகளின குறைபாடுகள் காரணமாக அவ்வாறான நிலமை ஏற்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மாத்திரம் ஆகும். அது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 28 சதவீதமாகும். அத்துடன், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான சபையின் ஒட்டுமொத்த வீதவரி ரூபா 106,308,257 ஆகும். | | எதில்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.3 வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதயில் உள்ளபடியான நிலுவை கடை வாடகை ரூபா 2,577,873 ஆக இருந்ததுடன், உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துகின்றேன். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டின் பிரகாரம் நிலுவை மீதியொன்று இல்லாதிருந்த போதிலும், நிலுவை வருமான பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 152,000 ஆக காணப்பட்டது. | உரிய நிலுவை தொகைகளை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். | வருடாந்த மதிப்பாய்வு அறிக்கைகள் மற:றும் அனுமதிப்பத்திரம் பெற்று வியாபரங்களிடைடே ய வேறுபாடு ஏற்படக்கூடும். |

**2.2.5 ஏனைய வருமானம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலுவை ஏனைய வருமானம் பட்டோலைகளின் பிரகாரம் கேள்வி வருமானம் ரூபா 1,029,527 ஆக இ.ருந்ததுடன், நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 729,185 மற்றும் நாளாந்த சந்தைக் கட்டணம் ரூபா 9,929,300 ஆக 03 வருடங்களுக்க மேற்பட்ட நிலுவை காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய ஏனைய வருமானங்களை உரிய காலத்தில் அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் அறிவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற்றுக் கொள்ள வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 22,771,442 ஆக இருந்ததுடன், சபைக்குரிய நீதிமன்ற தண்டப்பணங்கள் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவையும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று (அபவிவிருத்தி திட்டம் எனும் பெயரில்) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆம் திககிய PED/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றிக்கை 04 ஆம் பந்திக்கு இணங்காமை. | சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்தம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 659,255,000 பெறுமதியான 16 பணிகளுக்காக செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நிறைவேற்றப்பட பணிகளை செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கி அவற்றை காலத்தில் நிறைவேற்ற வேண்டும். | எதிர்காலத்தில நிதி ஒதுக்கீடு செய்யப்படும் விதத்தில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிப்பதாக அறிவிக்கின்றேன். |

**(இ) நிதியேற்பாடுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 பணிகளிலுக்காக மாத்திரம் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றமையால் பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்கின்றேன். |

**(ஈ) எதிர்பார்த்த அடைவ மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 09 பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 10,778,187 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை கைப்பற்ற முடியாதிருந்தது. | அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் காலத்தில் உரிய பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்கின்றேன். |

**(உ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ரூபா 1,675,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளையும் பெற்றுக்கொண்டிருந்தது 07 பணிகளில் மாத்திரம் ஆகும். | பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளுக்காக உரிய காலத்தில் துர்தமாக பணிகள் நிறைவேற்றப்பட் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்கின்றேன். |

**(எ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புத்தளம் நகர சபை எல்லையினுள் வாரம் ஒன்றிற்கு சுமார் 69 டொன்கள் குப்பை சேர்வதுடன் அவற்றுள் கூட்டெரு உற்பத்திற்காக ஈடுபடுத்துப்படுவது ¼ (12 தொன்கள்) அளவாகும். எஞ்சிய கழிவுகள் திறந்த இடத்திற்கு விடுவிக்கப்படுகின்றது. கழிவு முகாமைத்துவ நிலையத்தில் வாரமொன்றிற்கு 3.15 தொன்கள் கூட்டெரு உற்பத்திக்காக பெறப்படுவதுடன் வாரம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்படுவது சுமார் 225 கிலோகிராம் உரம் ஆகும். மேலும், கூட்டெரு நிலையத்திற்கு நீர், நீர்த்தாங்க மூலம் பெற்றுக் | துரிதமாக மின்சாரத்தினை பெற்று கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | தற்போது மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

கொள்ளப்படுவதுடன் மின்சாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதனால் சலிக்கும் இயந்திரத்தை பயன்படுத்த முடியாதிருந்தது.

**(ஏ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபை ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பில் அறிந்திருந்த போதிலும், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் பின்வருமாறு இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றை அளப்பதற்காக குறிகாட்டிகள் இல்லாதிருந்தமையால் அதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்படவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு உரிய இலக்குகளை அண்மிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் அறிந்துள்ளோம். நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து எதிர்காலத்தில் செயற்படுகின்றோம். |

| நோக்கம் | இலக்குகள் |
|---|---|
| வறுமையினை குறைத்தல் | வறுமையினை ஒழித்தல் |
| சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் | சுற்றாடல் பாதுகாப்பு |
| அங்கவீனமுற்ற நபர்களை வலுப்படுத்தல். | தமது வாழ்விற்கு சக்தியாதல். |
| சமூக சங்கங்களை உருவாக்குதல் | பல்வேறு மதங்களிடையே நற்புறவினை ஏற்படுத்தல் |

(ii) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பில் ஊக்கத்துடன் செயற்படும் தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும், அவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று

நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அண்மிக்கும் போது குறித்த பணிகளை கண்காணித்தல் பொருட்டு உரிய அடைவுகள் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி சபை களஞ்சியத்தின் தீப்பற்றுதல் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 948,000 ஆக இருந்ததுடன் ஆரம்ப விசாரணையொன்றினை மேற்கொள்வதற்கு 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி அழைக்கப்பட்ட விசாரணை குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் ஏற்பட்டிருந்த நிதி நட்டம் ரூபா 2,433,668 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை மற்றும் ஆரம்ப அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், உள்ளூராட்சி ஆணையாளரினால் நி.பி. 104 இன் பிரகாரம் மீண்டும் விசாரணை சபையினை நியமிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய நீல விசாரணை சபையொன்றினை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு மற்றும் முன்னைய ஆண்டிற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன் கடந்த வருடத்தில் காணாமல் போன புத்தகங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் மற்றும் ஆவணங்கள் / பதிவேட்டிற்கு | பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்த வேண்டியமை. | பதவிகளில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளமையால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உட்படுத்தாத பொருட்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 10/சிஈ/புத்/நச மற்றும் 2010 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஆதனங்கள் தடைசெய்தல் உத்தியோகத்தர்கள் களத்திற்கு சென்று நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்காக 10 சதவீத தரகுப் பணத்தை செலுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நகர சபையின் நிலுவை வருமானங்களை சேகரிக்கும் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இருவர் நியமிக்கப்பட்டு அலுவலகத்திற்கு செலுத்தும் நிலுவை பணத்திற்காக பத்து சதவீதப்படி தரகுப்பணம் ரூபா 104,000 மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. | களத்தில் சேகரிப்பதற்காக மாத்திரம் தரகுப் பணத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | 1982 நிதிப்பிரமாணம் 31 இனை திருத்தி 2015 யூலை 04 ஆந் திகதி வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 03/2013 மற்றும் நி.பி. 371(2)(ஆ) இன் பிரகாரம் ஏதேனும் விசேட பணியொன்றிற்காக பதவி நிலை தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000,000 ஆன ஆகக்கூடிய செயல் நிமித்த கட்டுநிதியினை வழங்குவதற்கு கூடிய போதிலும், மேற்படி பணத்தை விஞ்சி தனியார் நிறுவனம் மற்றும் நபர்களுக்கு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் தீர்க்கப்படாத ரூபா 57,347,818 தொகையான முற்பண மீதியொன்று காணப்பட்டதுடன், அதனுள் இனங்காணப்படாத ரூபா 18,580,150 தொகை மற்றும் 17 ஆண்டுகளாக தீர்க்கப்படாத ரூபா 223,656 ஆன மீதியும் ஆகும். மேலும், | துரிதமாக முற்பணங்கள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த குறைபாடு 2019 இல் இறுதிக் கணக்குகள் மூலம் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய வருடத்தில் பெறப்பட்டு தீர்க்கப்படாத ரூபா 3,444,688 தொகையும் உள்ளடங்கும். அதற்கமைய, நி.பி 371(5) மற்றும் 371(6)(ஆ) பிரகாரம். கட்டுநிதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | அல்பா கணக்கிற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது மதியுரை கட்டணமாக ரூபா 579,500 மற்றும் இருபது சதவீதமான முற்பணங்கள் ரூபா 2,000,000 வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த முற்பணங்களை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த முற்பணத்தின் செலவின தலைப்பில் தவறுதலாக செலுத்தப்பட்டதாகும். |
| (எ) | நகர சபை கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 32, 33 மற்றும் 34 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள அசையாத சொத்துக்கள் நகர சபைக்கு உரித்தாகும். அது தொடர்பில் 1920 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் ஆளுனரால் வழங்கப்பட்டுள்ள பட்டியலில் 35 அசையாத சொத்துக்கள் நகர சபையினுள் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கையளிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | சுவீகரிப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புத்தளம் நகர சபைக்குச் சொந்தமான இந்த அசையாத சொத்துக்களை சுவீகரிப்பதற்கு தொடர்ச்சியாக முயற்சி எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் பற்றாக்குறை மற்றும் மிகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காளர் பதவி பலவருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் இரண்டாந் தரத்திலான 64 பதவிகளில் 33 வெற்றிடமாக இருந்தது. மூன்றாம் நிலை பதவிகளினுள் அங்கீகாரமற்ற 54 அமைய பதவிகளும் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி தொழிலாளர்கள் மற்றும் 65 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டவாறு இருந்தது. | ஊழியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு மற்றும் மிகை பதவிகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பில் உரிய அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இந்த வெற்றிடங்களை நிரப்பாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓய்வுபெற்ற, இடமாற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 96 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 174,530 தொகையான கடன்மீதி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. | குறித்த கடன் மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவற்றை தேட முடியாமையால் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

**(இ) ஊழியர் பிணை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2008, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே அறவிடப்பட வேண்டிய ஊழிய பிணை தொகை ரூபா 38,698 தொகை, ரூபா 6,000 மற்றும் ரூபா 16,000 தொகை சபையின் பெயரில் முதலீடு செய்யப்படவில்லை. | ஊழிய பிணைப் பணத்தினை முதலீடு செய்வதற்கு மற்றும் உரிய காலத்தில் மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலவும் நிலைமையுடன் இனங்குகின்றேன். திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமாக காணப்பட்ட விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு. | பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான முறையில் விசாரணை செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| சொத்தின் தன்மை | | பெறுமதி | விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் நிலவிய காலம் |
| --- | --- | --- | --- |
| 49-9915- டிரொக்டர் இயந்திரம் | | 350,000 | 2014 ஆம் ஆண்டு முதல் |
| கல் ரேலர் RR99 | - | 600,000 | காலம் கண்டறிய முடியாது. |
| லோட் மாஸ்டர் HLM99 | - | 14,753 | காலம் கண்டறிய முடியாது. |
| மோட்டார் சைக்கிள் HY – 8815 | - | 69,950 | 2015 முதல் |
| மோட்டார் சைக்கிள் 156-7580 | - | 50,000 | 2014 முதல் |
| மோட்டார் சைக்கிள் HH - 99 | - | 41,500 | 2013 முதல் |

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

#### (அ) சுபிரி அல்பா வியாபார கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புத்தகளம் நகரின் மத்தியில் சுமார் 71,179 அளவான காணியில் 04 மாடிகளைக் கொண்ட 200 கடைகள் கொண்ட வியாபார தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 337,750,000 பெறுமதிக்கு நிர்மாணிக்கும் தனியார் கம்பனியுடன் 2015 யூன் 10 ஆந் திகதி நகர செயலாளரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கை 2017 யூலை 20 ஆந் திகதி அந்த பெறுமதியில் மேலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த செயற்திட்டத்தின் மதியுரை சேவைக்காக ஒப்பந்தப் பெறுமதியில் 2.8 சதவீதமான விகிதத்தினை செலுத்துவதற்கு மதியுரை கம்பனியுடன் 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதி தலைவரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையும் 2017 யூலை 20 ஆந் திகதி புதுப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (i) 2018 சனவரி 07 ஆந் திகதி அத்திவாரம் இடப்பட்டு தரைத் தளத்தின் கொன்கிரீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு வருடத்திற்கு முன்பிருந்து பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. | குறித்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய உரிய மேலதிக நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன். உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து அதனை பெற்று செயற்திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகளை பூர்த்தி செய்யவும், குறித்த கடையினை கேள்வியிடவும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ii) அந்த நிர்மாணப் பணிகள் வாஸ்து திட்டத்தினை தயாரிப்பதற்கு பொறியியல் ஆலோசகருக்கு 2014 யூலை 17 ஆந் திகதி ரூபா 1,535,442 செலுத்தப்பட்டிருந்த போதிலும், மதியுரை சேவைகளை வழங்குவதற்காக செலுத்தப்படும் கட்டணம் வழங்கல்களுக்காக மதியுரைக் கம்பனிக்கு செலுத்தப்பட்ருந்த 2.8 சதவீதமான மதியுரைக் கட்டணங்களினுள் 0.2 சதவீதம் படி வாஸ்துப் படியான திட்டத்தினை தயாரிப்பதற்கான செலவினமும் உள்ளடங்குகின்றமையால், உரே பணிக்காக ரூபா 675,500 இரு நெறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு செலவினத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு தேவையான மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள அந்த உத்தியோகத்தர்களுக்கு சிரமம் என எழுத்து மூலம் எமக்கு அறிவித்ததுடன், அதற்கமைய இந்த கட்டிடத்தின் திட்டத்தினை தயாரிப்பதற்கான மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள மற்றுமொரு நிறுவனத்தின் உதவியை நாட வேண்டியிருந்தது. அதற்கமைய முறையான பெறுகைகள் நடைமுறையொன்றினை பின்பற்றி ஆகோ தனியார் கம்பனி அந்த செயற்திட்டத்தின் மதியுரை நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டதுடன், அதற்கமைய புதிய கட்டிடத்தின் திட்டத்திற்காக ரூபா 675,000 ஆன தொகை அந்த நிறுவனத்திற்கு செலுத்த நேர்ந்ததென தெரிவிக்கின்றேன். |

**(ஆ) நெடுங்குளம் விளையாட்டுத் திடலினை அபிவிருத்தி செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்திற்காக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து ரூபா 12.2 மில்லியனான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்தி 2018 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டத்தின் | குறித்த செயற்திட்டத்தினை துரிதமான பூர்த்தி செய்ய நடவடிக்கை | ஒரு கள உத்தியோகத்தர் மாத்திரம் உள்ளமையால் இவ்வாறான தாமதம் ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முன்னேற்றத்தினை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 மே 23 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | |
| (ii) | 2018 திசெம்பர் 28 ஆந் திகதி 522 கியுப் சரளைக் கற்கள் கிடைத்ததாக குறிப்பிட்டு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் 300 கியுப் சரளைக் கற்களுக்கு ரூபா 2,400 படி ரூபா 720,000 செலுத்தப்பட்டிருந்தது. 2019 சனவரி 10 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் பிரகாரம் வேலைத் தளத்திற்கு விநியோகிக்கப்பட்ட சரளைக் கற்கள் கணிப்பிடக்கூடிய வகையில் குவித்து வைக்கப்பட்டிராததுடன், விநியோகிக்கப்பட்டிருந்தது சிவப்பு மணி ரகமொன்றாகும். | உரிய நியமத்திற்கு அமைவான சரளைக் கற்கள் ஆணவப்படுத்தப்பட்டு அளவீடுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | சரளைக் கற்களின் வடிவம் வேறுபட்டுள்ளது. |
| (iii) | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதல் பகுதி பணம், கோரிக்கை பற்றுச்சீட்டின் பிரகாரம் வேலைத்தள மூலப்பொருளாக ரூபா 1,885,021 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 615,780 இற்குரிய சீமெந்து பொதிகள் 622, ரூபா 116,994 தொகையான சீமெந்து கற்கள் 3162 மற்றும் ரூபா 780,000 தொகையான 60று இயலளவுடைய 40 சூரிய சக்தி மின் விளக்குகள் ஆகியவற்றுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், களஞ்சியத்தில் அல்லது வேலைத்தளத்தில் இந்த பொருட்கள் காணப்படவில்லை. | கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் களஞ்சியத்தின் பொருட்கள் / திரவியங்கள் கிடைத்தமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | சூரிய சக்தி, மின் விளக்குகள் பொருத்தமான தரத்தில் இல்லாதிருந்தமையால் அவை மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iv) | 2019 சனவரி 10 ஆந் திகதி வரையிலும், அத்திவாரத்தின் அளவு வரையிலும் நீர் நிரம்பியிருந்ததுடன், பக்கச்சுவர் நிரமாணிக்கப்பட்டிருந்த | உரிய நியமத்தின பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | குறைந்த காலத்தில் குறைந்த கிரயத்தில் சிறந்த தரத்திலான இத்திவாரங்களை நிர்மாணிப்பதற்காக |

| | | |
|---|---|---|
| பகுதிகளில் சீமெந்து மணல் கலவையினை பயன்படுத்தாது கற்கள் மாத்திரம் அடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | கருங்கற்கள் இடப்பட்டு அதன் மேல் சீமந்து கலவை இடப்படுகின்றது. அதன் பின்னர் கருங்கற்கள் இடப்பட்டு அதன் மேல் சீமந்து கலவை இடப்பட்டு நிர்மாணம் மேற்கொள்ளப்படுகின்றது. இது மிகவும் வெற்றிகரமாக வலுவானதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 179 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த செலவினத்தின் அளவினை விஞ்சக்கூடாத போதிலும், ரூபா 4,797,774 தொகை விஞ்சியிருந்ததுடன், 27 செலவின விடயங்கள் சபையின் அதிகாரப்பிரதேசத்தில் மற்றும் சபையின் நலனோம்பலுக்காக உள்ள ரூபா 12,985,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | பாதீட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த செலவின அளவினை விஞ்ச கூடாது. | பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு சில செலவின விடயங்களுக்காக போதுமானதாக இல்லாதிருந்ததுடன், இந்த பணிகள் அனுபவம் மிக்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமையால் உரிய கட்டுபாடின்றி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. |